<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>

<u>நாள் – 23.09.2024</u>

**OS.138/2018**

**வா.சா.2, ரவிவர்மா ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதி எனது அத்தை ஆவார். வாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்கனவே கொடுக்கல் வாங்கல் இருந்து வந்தது என்றால் சரிதான். 2014 ம் வருடம் 2ம் பிரதிவாதி துரை என்னிடம் ரூபாய் நான்கு லட்சம் கடன் வாங்கினார் என்றால் சரிதான். அதற்கு ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொடுத்தோம் என்றால் சரிதான். அது முடிந்து விட்டது. மேற்படி உடன்படிக்கை காலம் முடிந்ததால் அந்த உடன்படிக்கையை ரத்து செய்து விட்டு மீண்டும் உனது மாமியார் பேரில் 2015 ம் வருடம் இந்த வழக்கு உடன்படிக்கை போடப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் தான் 2ம் பிரதிவாதி கடன் பெற்றதால் நான் சொல்லித்தான் வழக்கு உடன்படிக்கை பத்திரத்தை எனது மாமியாருக்கு 2ம் பிரதிவாதி ஏற்படுத்திக் கொடுத்தார் என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-S.ASSEEN BANU,
Sub Judge, Harur